திருவள்ளூர் மேற்கு மாவட்டம் பள்ளிப்பட்டு தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் பொது உறுப்பினர் கூட்டம் ஒன்றிய கழகச் செயலாளர் ஜி.ரவிந்த்ரா ஏற்பாட்டில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு முப்பெரும் விழாவில் பெருந்திரளாக கலந்து கொள்வது, இளைஞர் அணி உறுப்பினர் சேர்ப்பது கிளை கழகம் தோறும் கொடியேற்றுவது சுவர் விளம்பரம் செய்வது உள்ளிட்ட பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் மாநில நெசவாளர் அணி துணைத்தலைவர் ஒ.ஏ.நாகலிங்கம், ஒன்றிய செயலாளர் ஆர்த்தி ரவி, டி.ஆர்.கே.பாபு, ம.கிரன், டி.எம்.சுகுமாரன், ஏகாம்பரம், இ.கே.உதயசூரியன், டி.ஆர்.திலிபன், ராஜா, கோபி, அம்பேத்கார் உள்பட பலர் உள்ளனர்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், மதுராந்தகம் அடுத்த கருங்குழி பேரூர் திமுக சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் கருங்குழியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இதில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு பேசினார் அருகில் பேரூர் செயலாளர் சுந்தரமூர்த்தி, பேரூராட்சித் தலைவர் தசரதன், துணைத் தலைவர் சங்கீதா சங்கர், அவைத்தலைவர் சீனிவாசன், மாவட்ட பிரதிநிதிகள் திருகாமு, சங்கர், துணைச் செயலாளர்கள் பார்த்திபன், நர்மதா, பொருளாளர் செந்தில்குமார் ஆகியோர் உள்ளனர்.

செப். 17-இல் தி.மு.க. முப்பெரும் விழா! திராவிட மாடல் ஆட்சியின் மகத்தான திட்டங்களை பிரச்சாரங்கள் மூலம் மக்களிடம் கொண்டு சேர்ப்போம்!

சென்னை மேற்கு மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்: மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிவிப்பு!

சென்னை, செப்.3

தி.மு.க. பவள விழா ஆண்டு செப்டம்பர் 17-ஆம் தேதி முப்பெரும் விழா நடைபெறுகின்றது என்றும் தி.மு.க. பவள விழா ஆண்டு முப்பெரும் விழாவை யொட்டி திராவிட மாடல் அரசின் சாதனைகளை சுவர் விளம்பரம் மற்றும் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்கள் மூலம் மக்களிடம் கொண்டு சேர்ப்போம் என்றும், சென்னை மேற்கு மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு தெரிவித்துள்ளார்.

சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நடைபெற்ற கழக பொது உறுப்பினர் கூட்டத்தில் நிறைவேற்றபட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:-

முத்தமிழறிஞர் கழக தலைவராக சுமார் 50 ஆண்டு காலம் தலைமை தாங்கி நடத்திய இயக்கமாம் திராவிட முன்னேற்றக் கழகத்தை, தான் தலைவராக பொறுப்பேற்ற நாளிலிருந்து தன் தோளிலும் நெஞ்சிலும் சுமந்து, கழகத்தை கட்டுக் கோப்பாக வழிநடத்தி தமிழ்நாட்டின் முதலமைச்சராக (ஏன்) இந்தியாவுக்கே முன்னோடியாக செயலாற்றி 'நாடும் நமதே! நாற்பதும் நமதே' என்ற முழக்கத்தை முன்வைத்து அதற்கேற்றாற் போல் வியூகங்கள் அமைத்து, நாடாளுமன்றத் தேர்தல் களத்தில் அனைத்து நாடாளுமன்ற தொகுதிகளுக்கும் நேரடியாகச் சென்று மக்களை சந்தித்து 40/40 என்ற மகத்தான வெற்றியை கழக தலைமையிலான இந்தியா கூட்டனிக்கு பெற்று தந்த தலைவர், எதிர் கொண்ட அனைத்து தேர்தல்களிலும் தொடர் வெற்றியின் நாயகர் கழகத்தின் தலைவரும் தமிழ் நாட்டின் முதலமைச்சருமான சுழக தலைவருக்கும் மற்றும் கழக இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் சென்னை மேற்கு மாவட்டத்தின் சார்பில் உளம் கனிந்த நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்து கொள்வதுடன் வெற்றிக்கு உழைத்த அனைத்து நிர்வாகிகளுக்கும் இந்தியா கூட்டணிக்கு வாக்களித்த அனைத்து வாக்காளர்களுக்கும் "நன்றி.

1949-ஆம் ஆண்டில் சென்னை ராபின்சன் பூங்காவில் துவங்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம் எனும் அரசியல் பேரியக்கம் சுமார் 75 ஆண்டுகளாக தமிழ்நாடு மக்களுக்கு சிறப்பாகப் பணியாற்றி இந்த 2024-ஆம் ஆண்டு பவள விழாவாக செப்டம்பர் 17ஆம் நாள் கொண்டாட இருப்பதால் திராவிட மாடல் ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட மகத்தான திட்டங்களை சுவர் விளம்பரங்கள் மற்றும் தெருமுனை பிரச்சார கூட்டங்கள் வாயிலாக மக்களிடம் அரசின் சாதனைகள் விளக்கியும் கழக கொடி கம்பங்கள் புதுப்பிக்கப்பட்டு பட்டொளி வீசி பறந்திடவும் மேலும் கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் எழுச்சிமிகுந்த விழாவாக கொண்டாடப்படும் இந்த விழா.

திராவிட மாடல் நாயகர் ஆட்சி பொறுப்பேற்றதில் இருந்து பல்வேறு மக்கள் பயன் பெறும் திட்டங்கள் மகளிர் உரிமை தொகை, மகளிர் கட்டணமில்லா பேருந்து வசதி, புதுமைப் பெண் திட்டம், தமிழ் புதல்வன் திட்டத்தின் கீழ், கல்லூரி மாணவி / மாணவருக்கு மாதம் தோறும் 1000 ரூபாய் வழங்கப்படுகிறது.

கர்ப்பக் காலத்தில் மகப்பேறு விடுப்பு முடிந்து பணிக்கு திரும்பும் பெண் காவலர்களுக்கு அடுத்த 3 ஆண்டுகளுக்கு அவர்களது சொந்த மாவட்டத்தில் பணி செய்ய ஆணை.

அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியருக்கு காலை உணவுத்திட்டம்.

இல்லம்தோறும் கல்வி, மக்களை தேடி மருத்துவம், இலவச மருத்துவ காப்பீடு திட்டம், மளிர் சுய உதவி குழுக்களுக்கு வங்கிகளில் கடன் மற்றும் வேலை வாய்ப்பு போன்ற எண்ணற்ற திட்டங்களை தமிழ் நாட்டு மக்களுக்கு நிறைவேற்றி தரும் கழக தலை வர் முதல்வர் அவர்களுக்கு நன்றி.

31 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு!

தமிழ்நாட்டின் முதல்வராக மு.க.ஸ்டாலின் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்ற பிறகு கடந்த 3 ஆண்டுகளில் ஏறத்தாழ 10 லட்சம் கோடி ரூபாய்க்கான முதலீடுகளை தமிழ்நாட்டிற்கு ஈர்த்துள்ளார். இதனால் பல் வேறு மாவட்டங்களிலும் கடந்த 3 ஆண்டுகளில் நேரடியாகவும், மறைமுகமாகவும் 31 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்புகள் கிடைத்துள்ளது. இந்நி லையில், அமெரிக்காவில் உள்ள சான்பிரான்சிஸ்கோ மற்றும் சிகாகோ ஆகிய நகரங்களுக்கு 17 நாட்கள் அரசு முறைப் பயணம் மூலம் தமிழகத்திற்கு பல்வேறு தொழில் முதலீடுகள் ஈர்க்கும் வகையில் உழைத்துக் கொண்டிருக்கின்ற கழக தலைவர் தமிழ்நாட்டு முதல்வர் அவர்களுக்கு எங்களது பாராட்டுதலும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

உலகளவில் இந்தியாவுக்கும் தமிழ்நாட்டுக்கும் விளையாட்டுத் துறையில் தனி இடம் பெற்றுள்ளது என்பதை நிரூபிக்கும் வகையில், நடந்து முடிந்த கேலோ இந்தியா, செஸ் ஒலிம்பியாட், முதலமைச்சர் கோப்பை மற்றும் தற்பொழுது உள்நாட்டினர், வெளிநாட்டினர் என பல்வேறு தரப்பினரின் பாரட்டையும் வரவேற்பையும் பெற்றுள்ள Formula 4 கார் பந்தயத்தை, சென்னை மாநகராட்சியில் மக்களுக்கு எந்தவித போக்குவரத்து இடையூறும் எற்படாத வண்ணம் சிறப்பான கட்டமைப்புடன் வெற்றிகரமாக நடத்தித்காட்டிய கழக இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சென்னை மேற்கு மாவட்ட கழகத்தின் சார்பாக பாராட்டுதலையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தி.மு.க. பவள விழா ஆண்டு

திராவிட முன்னேற்ற கழகத்தின் பவளவிழா ஆண்டான முப்பெரும் விழாவில் பாவேந்தர் விருதுக்கு சென்னை மேற்கு மாவட்டம், சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட, இவர் கலைஞர் அவர்களுடன் நீண்ட நாள் பயணித்தவர், எந்த பிரதிபலனும் எதிர்பாராது தற்போது வரை கழகத்திற்காக அயராது உழைப்பவர், சிறந்த பேச்சாளர், எழுத்தாளர், பண்பாளர், கழக தீர்மான குழு தலைவர் கவிஞர் தமிழ்தாசன் அவர்களின் பெயரை அறிவித்ததிற்கு கழக தலைவர் அவர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முதலீட்டாளர்கள் மாநாடுகளை அவ்வப்போது நடத்தி வருகிறார் முதல்வர்!

தமிழ்நாட்டை நோக்கி வரும் முன்னணி தொழில் முதலீட்டாளர்கள்!

'தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தில் பெருமிதம்!

சென்னை, செப். 3 -

தமிழ்நாட்டில் அனைத்து வசதிகளும் இருப்பதால், சர்வதேச அளவில் இருந்தும் பல்வேறு மாநிலங்களில் இருந்தும் முன்னணி தொழில முதலீட்டா ளர்கள் தமிழ் நாட்டை நோக்கி வருகிறார்கள். அவர்களின் வருகையை எதிர் நோக்கி அவ்வப்போது முதலீட்டாளர்கள் மாநாடுகளை நடத்தி வருகிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என்று 'தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தில் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளது.

இது குறித்து 2.9.2024 தேதிய 'தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தில் கூறி யிருப்பதாவது:L

தமிழ்நாடு எல்லா துறைகளிலும் வளர்ச்சி பெற்றுவருகிறது என்றால் அதற்கு அடிப்படை, தொழில் வளர்ச்சிதான். முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின், "2030க்குள் தமிழ்நாட்டை ஒரு டிரில்லியன் டாலர், அதாவது ரூ.83 லட்சம் கோடி பொருளாதார நாடாக மாற்றுவேன்" என்று பிரகடனப்படுத்தி, அந்த இலக்கை நோக்கி அரசை வேகமாக அழைத்து செல்கிறார். தொழில் வளர்ச்சி என்பது சும்மா வந்துவிடாது. அதற்கான சாதகமான சூழ்

நிலை முதலில் அந்த மாநிலத்தில் இருக்கவேண்டும். அதைப் பார்த்துத்தான், தொழில் முதலீட்டாளர்கள் ஆர்வத்துடன் வருவார்கள்.

தற்போது, எல்லா மாநிலங்களும் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதில் அதிக ஆர்வம்

காட்டிவருகின்றன. ஆனால், தொழில் முதலீட்டா ளர்களோ அழைத்தவுடன் அப்படியே சென்றுவிடுவதில்லை. "சட்டம்ஒழுங்கு நிலை என்ன? மின்சாரம் தங்குதடையில்லாமல் கிடைக்கிறதா? சாலை, போக்குவரத்து வசதிகள் எப்படி? என்பதை அலசி ஆராய்ந்து பார்த்துவிட்டுத்தான் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவார்கள்.

அவர்கள் எதிர்பார்க்கும் வசதிகள் அனைத்தும் தமிழ்நாட்டில் இருப்பதால், இப்போது சர்வதேச அளவில் இருந்தும், பல்வேறு மாநிலங்களில் இருந்தும் முன்னணி தொழில் முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டை நோக்கி வருகிறார்கள். தமிழக அரசும் அவர்களின் வருகையை எதிர்நோக்கி அவ்வப்போது முதலீட்டாளர் மாநாடுகளை நடத்தி வருகிறது. கடந்த ஜனவரி மாதத்தில் சென்னையில் நடந்த உலக முதலீட்டா ளர்கள் மாநாடு மூலமாக 631 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

கையெழுத்திடப்பட்டு ரூ.6.64 லட்சம் கோடி முதலீடு கள் ஈர்க்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் செயல் வடிவம் பெற்றால் 14 லட்சம் பேருக்கு நேரடியாகவும், 12 லட்சம் பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிடைக்கும்.

இதன் தொடர்ச்சியாக, சென்னையில் சில நாட்களுக்கு முன்பு நடந்த தமிழ்நாடு, முதலீட்டா ளர்கள் மாநாட்டின் போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ரூ.17,616 கோடி முதலீட்டில் 64,968 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் 19 தொழிற்சாலைகளை தொடங்கி வைத்துள்ளார். இதுமட்டுமல்லாமல், ரூ.51,157 கோடி முதலீட்டில் 41,835 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், 28 தொழில் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியுள்ளார். மாநாட்டில் முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் பேசும்போது, "கடந்த 3 ஆண்டு கால ஆட்சியில் 31 லட்சம் பேருக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில் ரூ.9 லட்சத்து 74 ஆயிரம் கோடி முதலீடுகளை ஈர்த்து இருக்கிறோம்" என்று பெருமைபட கூறினார்.

இந்த தொழிற்சாலைகளில் எல்லாம் பெண்களுக்கு அதிக வேலைவாய்ப்பு கிடைக்கிறது. பெண்களுக்கு பாதுகாப்பான சூழ்நிலை தமிழ்நாட்டில் நிலவுவதால் இப்போது பல தொழிற்சாலைகளில் பெண்கள் மட்டுமே அதிக எண்ணிக்கையில் வேலை செய்கிறார்கள். எடுத்துக்காட்டாக, சென்னை அருகே ஸ்ரீபெரும்புதூரில் தைவான் நாட்டை சேர்ந்த பிரபல நிறுவனமான பாக்ஸ்கான், ஆப்பிள் ஐபோன்களை தயாரித்து வருகிறது. இதில் பணியாற்றும் 41 ஆயிரம் பேரில் 35 ஆயிரம் பேர் பெண்கள்தான். 'ஆணுக்கு பெண் சமம்' என்ற நிலைமாறி, 'பெண்ணுக்கு நிகர் ஏது? என்றநிலை உருவாகிவிட்டது.

இப்போது, தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக அமெரிக்கா சென்றுள்ள முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் 7 தொழில் நிறுவனங்கள் ரூ.1,300 கோடி மதிப்பில் தொழில் தொடங்குவ தற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இதன் மூலம் 4,600 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இது போன்று, ஆர்வத்துடன் தமிழகத்தில் தொழில் தொடங்க வரும் முதலீட்டாளர்களுக்கு தேவையான அனுமதிகளை விரைவாக வழங்கவேண்டும். இப்போது தொழில் வளர்ச்சியில் முன்னிலை வகிக்கும் தமிழ்நாடு விரைவில் முதலிடம் பெறவேண்டும். அதற்கான தூரமும் வெகுதொலைவில் இல்லை.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழக பொது உறுப்பினர் கூட்டம் நேற்று (02.09.2024) நுங்கம்பாக்கம் மகாலிங்கபுரத்தில் அமைந்துள்ள எம்.எல்.எம். திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு எழுச்சி உரையாற்றி, தீர்மாணங்களை வெற்றிகரமாக நிறைவேற்றினார். இதில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் நா.எழிலன், மாவட்ட நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர், தலைவர் துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள் மற்றும் பாக முகவர்கள், கழக மூத்த முன்னோடிகள் என பலர் பங்கேற்று சிறப்பித்தனர்

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ்

கொளத்தூர் - துறைமுகம் தொகுதியில் பல்வேறு திட்டப்பணிகள்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆய்வு!

சென்னை, செப்.3-

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின் படி நேற்று (02.09.2024) வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் நடைபெற்று வரும் திட்டப் பணிகளையும் மற்றும் புதிய திட்டங்களை செயல்படுத்துவதற்காகவும் இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 0.4 ஏக்கர் பரப்பளவு கொண்ட கொளத்தூர் ஏரிக் கரையை ரூ.6.26 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தி பணிகளை தொடங்குவது தொடர்பாகவும், அதனை தொடர்ந்து, அகரம், ஜெகந்நாதன் தெருவில் ரூ.12 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் கொளத்தூர் மறுவாழ்வு மற்றும் இரத்த சுத்திகரிப்பு மையத்தினையும் (Kolathur Dialysis Centre), அதன் அருகாமையில் பெருநகர சென்னை மாநகராட்சியின் பன்னோக்கு மையத்தில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் (Coworking Space) பகிர்ந்த பணியிட மையத்தையும், அதனை தொடர்ந்து, வால்டாக்ஸ் ரோடு, சௌகார்பேட்டை, தண்ணீர் தொட்டி தெருவில் சி.எம்.டி.ஏ. சார்பில் ரூ.129.05 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய 700 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான இடத்தினையும், அதனை தொடர்ந்து, ஜார்ஜ் டவுன், பிராட்வே ரோடு, பி.ஆர். என். கார்டனில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.85.68 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய 504 குடியிருப்புகளுக்கான இடத்தினையும் மற்றும் இராயபுரம், 60ஆவது வார்டு, கிளைவ் பேக்டரி, 234 குடிசை மாற்று வாரியக் குடியிருப்பு பகுதிகளையும் ஆகிய வற்றை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்து சமய அறநிலைத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு வடசென்னை மக்களுடைய அடிப்படைத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக "வடசென்னை வளர்ச்சித் திட்டம்" என்ற திட்டத்தினை கடந்த 14.03.2024 அன்று சென்னை, தங்கசாலையில் அறிவித்து தொடங்கி வைத்தார்கள். அதன் தொடர்ச்சியாக ஒட்டுமொத்தமாக சுமார் 5,780 கோடி ரூபாய் செலவில் 225 பணிகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்து, அதில் 100க்கும் மேற்பட்ட பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இருக்கின்றன. குறிப்பாக சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் 28 பணிகளை 685 கோடி ரூபாய் செலவில் மேற்கொண்டு இருக்கின்றது. மற்ற துறைகளுக்கு சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் சார்பில் ஒட்டுமொத்தமாக இந்த வட சென்னை வளர்ச்சி திட்டத்தில் சுமார் 1,613 கோடி ரூபாய் ஒதுகீடு செய்து அந்த பணிகளை துரிதப்படுத்துகின்ற நடவடிக்கையில் இறங்கி இருக்கின்றோம்.

வண்ண மீன்கள் சந்தை!

முதலமைச்சர் அவர்கள் கடந்த 26.08.2024 அன்று கொளத்தூர் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான வண்ண மீன்கள் சந்தைக்கு அடிக்கல் நாட்டினார்கள். அதோடு சேர்த்து கொளத்தூர், ரெட்டேரி மற்றும் புழல் ஏரிகளை மேம்படுத்துவதற்காகவும், இராயபுரம் பகுதியில் ஒரு மாநகராட்சி சமுதாயக்கூடமும், திருவிக நகர் பகுதியில் சலவை கூடமும் என்று ஒட்டுமொத்தமாக ரூபாய் 115.58 கோடி செலவில் வடசென்னை வளர்ச்சி திட்டத்திற்கு அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார். இன்றைக்கு அந்த பணிகளை துவக்குகின்ற வகையில் எங்கள் துறையினுடைய செயலாளர் திருமதி. காகர்லா உஷா அவர்களும், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் உறுப்பினர் செயலாளர் அன்சுல் மிஸ்ரா அவர்களும், பெருநகரத்தினுடைய மேயர் அவர்களும், மத்திய வட்டார துணை ஆணையாளர் பிரவீன் குமார் அவர்களும் மண்டல குழு தலைவர்கள், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் என ஒருங்கிணைந்து இன்றைக்கு ஆய்வு பணிகளை மேற்கொண்டு இருக்கின்றோம்.

சென்னையில் புதிதாக Co working Space என்று சொல்லக்கூடிய பகிர்ந்த பணியிட மையம் ஒன்றை துவங்குவதற்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுடைய இந்த கொளத்தூர் தொகுதியில் தளபதி அவர்களுடைய சீரிய சிந்தனை யில் உருவான இந்த திட்டத்தை செயல்படுத்துவதற்குண்டான கட்டிட வரைபட அமைப்புகளை இன்றைக்கு பார்வையிட்டோம். அதில் படிப்பதற்கு நல்ல போதுமான சூழ்நிலை இல்லாத மாணவச் செல்வங்களுக்கு படிப்பதற்குண்டான இடம், அதேபோல் வீட்டிலே இருந்து பணியாற்றக் கூடியவர்களுக்கு போதிய வசதியின்மை அவர்களின் பணிகளை நேர்த்தியாக செய்ய முடியாத சூழ்நிலை உள்ளவர்களுக்கும், அவர்களுக்கு பணி செய்வதற்கு உண்டான தளமும், அறமும் உருவாக்கப்பட இருக்கின்றன. அதை இன்று பார்வையிட்டோம் சிறு சிறு திருத்தங்களை துறையினுடைய செயலாளர் அவர்களும் மற்றவர்களும் எடுத்து கூறி இருக்கின்றார்கள். அந்த குறைகளை எல்லாம் கலந்து இந்த மாத இறுதிக்குள் முதலமைச்சர் அவர்களுடைய பொற்கரங்களால் இந்த Coworking Space என்று சொல்லக்கூடிய பகிர்ந்த பணியிட மையத்தை திறந்து வைப்பதற்காக திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின்போது பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர். பிரியா ராஜன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் சு.பிரபாகர், முதன்மைச் செயல் அலுவலர் அ.சிவஞானம், மத்திய வட்டார துணை ஆணையர் கே. ஜெ.பிரவீன் குமார், வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, மண்டலக் குழுத்தலைவர்கள் திருமதி.சரிதா மகேஷ்குமார், ஸ்ரீராமலு, சி.எம்.டி.ஏ தலைமைத் திட்ட அமைப்பாளர் எஸ்.ருத்ரமூர்த்தி, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய தலைமைப் பொறியாளர் சு.லால் பகதூர், கண்காணிப்பு பொறியாளர் இளம் பருதி, சி.எம்.டி.ஏ. கண்காணிப்பு பொறியாளர்கள் ராஜமகேஷ்குமார், பாலமுருகன், மண்டல அலுவலர்கள் ஏ.எஸ்.முருகன், திருமதி.பரிதா பானு, மாமன்ற உறுப்பினர்கள் நாகராஜன், திருமதி. சாரதா, திருமதி. அமுதா, திருமதி.தாவுத் பீ, திருமதி.யோகபிரியா, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் ஐ.சி.எப். முரளி, சந்துரு, நீர்வள ஆதாரத் துறை, சென்னை குடிநீர் வழங்கல் துறை, மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதி, 123 வது மற்றும் 123 அ வட்ட கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. இதில் வட்ட அவை தலைவர் எம்.கே.ஆலை ஆனந்த் தலைமையில், வட்டக் கழக நிர்வாகிகள் முன்னிலையில், மாவட்ட பிரதிநிதிகள், பகுதி பிரதிநிதிகள் வரவேற்பில், மயிலை மேற்குப் பகுதி செயலாளர் நந்தனம் மதி எம்.சி, வட்ட செயலாளர்கள் மு.இ.ஏழுமலை, மு.இராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்ட இக்கூட்டத்தில், மாவட்ட செயலாளரும், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினருமான மயிலை த வேலு எம்.எல்.ஏ. கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்கினார். முன்னாள் வட்ட கழக பொருளாளர் ஆர். தயாளன் நன்றி கூறினார்.

சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி சைதை மேற்கு பகுதி 142வது (அ) வட்ட திமுக சார்பில் வட்ட செயலாளர் எஸ்.பி.கோதண்டம் தலைமையில் 01.09.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில் சைதாப்பேட்டை பெருமாள் கோவில் தெருவில் உள்ள ஸ்ரீவிஜயராகவலு திருமண மண்டபத்தில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு பகுதிக் கழகச் செயலாளரும், பத்தாவது மண்டலக் குழுத் தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி ஆலோசனைகளை வழங்கினார். பொதுக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், பகுதிக் கழக நிர்வாகிகள் களக்காடிஎல்லப்பன், த.சம்பத், வி.பி.ஜானகிராமன், அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் ந.மணிகண்டன், அஞ்சல்ராமன், கோ.பாஸ்கரன், ஆர்.கிருஷ்ணகுமார் உள்ளிட்ட மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளைச் சார்ந்த நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், பாக பொறுப்பாளர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.